# நோவாவைப் போல தன்னோடு நடப்பவர்கள் யாவரையும் தேவன் இரட்சிக்கிறார்

### சிறுவர்களுக்கு போதிப்பவர்கள் பாடம் S1b யை வாசிக்கவும்

ஜெபம்: ஓ! எங்கள் இரட்சகராகிய தேவனே, நாங்கள் நற்செய்தியைப் பகிர்ந்து கொள்ளும் மக்களை இரட்சியும். இயேசு வருவதற்காகக் காத்திருக்கும் எங்களை தீமையில் இருந்து இரட்சியும். மரணத்தில் இருந்தும் இரட்சியும்.

1. **இரட்சிப்பில் களிகூரும்படி உங்கள் மந்தையை ஆயத்தப்படுத்தி பாவிகளை இரட்சித்து வழிநடத்தவும்**


**பின்னணி:** நோவாவின் கதையை **ஆதி. 6:5-9:19** வரை வாசிக்கவும். **ஆதி 6:5-13** ல் தேவன் ஏன் தான் படைத்த மக்களை அழித்தார் என்பதைக் காண்க.

தேவன் நோவாவையும் அவனது குடும்பத்தையும் ஏன் தப்பவிட்டார் என்பதை **ஆதி. 6:8-9** ல் காண்க.

மாபெரும் ஜலப்பிரளயத்தில் இருந்து நோவாவின் குடும்பத்தை தேவன் எவ்வாறு காத்தார் என்பதை **ஆதி. 6:13-22** ல் காண்க.

*(பதில்கள்: நோவாவும் குடும்பவும் ஒரு பேழையை உண்டுபண்ணி அதற்குள் போனதால் மூழ்கவில்லை. "பேழை" யைக் குறிக்கும் எபிரேய சொல்லுக்கு பெரிய பெட்டி என்று அர்த்தம். நோவாவின் பேழை படகு போல் மிதந்த ஒரு மாபெரும் பெட்டியாகும்).*

உயிர்த்தெழுந்த இயேசு எல்லா தேசங்களுக்கும் செல்வதற்காக நமக்கு கட்டளை இட்டது என்ன என்பதை லூக். 24:46-48 ல் காண்க.



*(பதில்கள்: இயேசுவின் மரணம், உயிர்த்தெழுதல், மனந்திரும்பும் யாவருக்கும் தேவனின் மன்னிப்பு)*

நம்மை இரட்சிக்க இயேசு செய்த இரண்டு மாபெரும் காரியங்களை லூக். 24:46 ல் காண்க.

*(பதில் 1) அவர் இரத்தம் சிந்தியதால் தேவன் நமது பாவங்களை மன்னித்தார். 1 யோவான் 1:7;2) அவரது உயிர்த்தெழுதலினால் அவர் நமக்கு புதிய, பரிசுத்தமான நித்திய வாழ்க்கையைத் தருகிறார், ரோமர் 6:3-14).*

காண்க:

1) **எபே. 2:6** : யாரோடு நாம் பரலோகத்துக்கு எழுப்பப்பட்டோம்?

2) **1 கொரி. 12:1-13,** இயேசுவின் நித்திய சரீரத்துக்குள்ளாக நம்மை வைத்தது யார்?

3) **1 கொரி. 15:21-23,** நமது உயிர்த்தெழுதல் யார் மூலமாக வருகிறது?

4) **ரோமர் 6:3-14** நாம் எதற்காக மரித்து ஒரு புதிய நித்திய வாழ்க்கைக்குள் எழுகிறோம்?

5) **1 பேதுரு 3:18-22:** இயேசுவின் உயிர்த்தெழுந்த சரீரத்தை பேழை எவ்வாறு குறிக்கிறது?

*(பதில்கள்: 1) கிறிஸ்து 2) பரிசுத்த ஆவி 3) இயேசு 4) பாவம் 5) நோவாவின் பெரும் பேழை தேவனோடு நடந்தவர்கள் தப்பிக்கும் வாகனமாக விளங்கியது போலவே கிறிஸ்துவின் உயிர்த்தெழுந்த சரீரமும் திகழ்கிறது. நாம் கிறிஸ்துவுக்குள்ளாக அவரது நித்திய சரீரத்தில், ஒரு புதிய, பரிசுத்த, நித்திய வாழ்க்கைக்குள் பிரவேசிக்கிறோம். இயேசுவே நமது பேழை.*

பேதுரு விளக்கிய ஞானஸ்நானத்தின் இரு அம்சங்களை 1 பேதுரு 3:21 ல் காண்க.

*பதில்: 1) மாம்சமான சரீரத்தை தண்ணீரால் கழுவுதல் 2) தூய மனசாட்சி*

இந்த இரு அம்சங்களில் எது இரட்சிப்புக்கு வழிகாட்டுகிறது: தண்ணீரா அல்லது தேவனிடம் இருந்து வரும் ஆவிக்குரிய கழுவதலா?

*(பதில்: தண்ணீரைக் கொண்டு நமது சரீரத்தில் உள்ள அழுக்கை கழுவும் வெளிப்பிரகாரமான சடங்கால் நாம் இரட்சிப்பு அடையவில்லை; ஆனால், தேவனை பற்றும் நல்மனசாட்சியுடன் இயேசுவின் உயிர்த்தெழுதலில் விசுவாசம் வைப்பவர்களே இரட்சிக்கப்படுவார்கள். நல்ல மன சாட்சிக்கு விசுவாசமும் மனந்திரும்புதலும் அவசியம் (யோவான் 3:16; அப். 2:38).*

தேவன் லோத்துவையும் அவனது மகள்களையும், சோதோம் கொமோராவை தேவதூதர்கள் அழிக்கும் போது காப்பாற்றினார் என்பதை ஆதி. 17:19-22 ல் காண்க.

*(பதில்: தூதர்கள் அவர்களை நகரத்தை விட்டு பாதுகாப்பான இடத்திற்கு அனுப்பி விட்டனர்).*

ஆவிக்குரிய மரணத்தில் இருந்தும், நித்திய நியாயத்தீர்ப்பில் இருந்தும் எவ்வாறு தேவன் நம்மை இரட்சிக்கிறார் என்பதை விளக்க, பேதுரு சுட்டிக்காட்டிய, உலகபூர்வமான மரணத்தில் இருந்து கிடைத்த இரட்சிப்பைப் பற்றிய இரண்டு உதாரணங்களை 2 பேது. 2:4-9 ல் காண்க.

*(பதில்கள் 1) தேவன் நோவாவையும் அவன் குடும்பத்தையம் ஒரு பெரிய ஜலப்பிரளயத்தில் இருந்து விடுவித்தார். 2) தேவன் லோத்தையும் குடும்பத்தையும் ஒரு பெரிய அக்கினியில் இருந்து விடுவித்தார்).*

தேவன் இஸ்ரவேலரை எவ்வாறு விடுவித்தார் என்பதை யாத். 14:21-31 ல் காண்க

*(பதில்: தேவன் செங்கடலை பிளந்து அவர்கள் தப்பி ஓடுமாறு செய்தார். பின் அதே கடலில் அவர்களைத் துரத்தி வந்த எகிப்தியரை மூழ்கடித்தார்).*

தம்மை நம்பிய மக்களை இயேசு எந்த விஷயங்களில் இருந்து இரட்சித்தார் என்பதைக் காண்க

1) லூக் 7:36-50 பாவிகள்

2) மத். 4:23-25, நோயாளிகள்

3) மாற்கு 6:34-42 பசியுற்றோர்

4) மாற்கு 5:1-15 அசுத்த ஆவி பிடித்தோர்.

5) லூக் 7:11-16, மரித்தோர்

6) லூக். 17:12-19, குஷ்டரோகிகள்

*(பதில்கள்: 1) அவர்களுடைய பாவங்களை மன்னித்தார்*

*2) குணமாக்கினார்*

*3) கொஞ்சம் உணவை பெருகச் செய்து திரளானோர் உண்ணும்படி செய்தார்*

*4) அசுத்த ஆவிகளைத் துரத்தி விடுவித்தார்*

*5) மரித்தவர்களை சில சமயம் எழுப்பினார்*

*6) குஷ்டரோகிகளை விசுவாசித்தபோது சொஸ்தமாக்கினார்)*

தம்மை நம்புகிறவர்களுக்கு இயேசு செய்வதை இந்த வசனங்களில் காண்க:

1) யோவான் 6:39-47

2) மத்தேயு 25:31-40

3) 1 தெச. 1:8-10

4) கொலோ. 2:15

*(பதில்கள்: 1) இறந்து போன விசுவாசிகளை மரித்தோரில் இருந்து நித்திய வாழ்விற்குள் எழுப்புகிறார்*

*2) திரும்பி வரும்போது எல்லா விசுவாசிகளுக்கும் பலன் அளிப்பார்*

*3) வரும் தேவ கோபத்தில் இருந்து நம்மை பாதுகாக்கிறார்*

*4) அசுத்த ஆவிகளிடம் இருந்து விடுவிக்கிறார்*

தேவன் நம்மை எப்போதுமாக இரட்சிக்க நாம் என்ன செய்ய வேண்டும் என்பதைக் காண்க

1) எபே. 2:8-10

2) அப். 2:37-38

3) 1 தெச. 1:8-10

4) எபி. 5:7-9

*(பதில்கள்: 1) நம்பு 2) மனந்திரும்பு 3) இயேசு பரலோகத்தில் இருந்து வர காத்திரு 4) இயேசுவுக்குக் கீழ்ப்படி)*

## 2. வரும் வாரத்திற்கான நடவடிக்கைகளை உடன் ஊழியர்களுடன் திட்டமிடுக

உங்கள் சபைக்கு வந்தவர்களை சென்று சந்தித்து இரட்சிப்படையும்படி அழைக்கவும்.

நோயாளிகள், அதைரியப்பட்டோர், ஒடுக்கப்பட்டோரை சந்தித்து தேவன் அவர்களை பிரச்சினைகளில் இருந்து விடுவிக்குமாறு ஜெபிக்கவும்.

## 3. வரும் ஆராதனை வேளைக்காக உடன் ஊழியர்களுடன் திட்டமிடவும்

**கூறுக:** நோவாவின் கதையை கூறவும் அல்லது நடிக்கவும்.

**விளக்குக:** மோசமான விஷயங்களில் இருந்து தேவன் எவ்வாறு மக்களை விடுவித்தார்? (பாகம் 1 ஐ பார்க்கவும், மேலே)

**விளக்குக:** நித்தியமாக எவ்வாறு இன்று மக்கள் இரட்சிக்கப்பட முடியும்.

**சிறுவர்கள்:** தாங்கள் பயிற்சி செய்ய நாடகத்தை அரங்கேற்றி, தயாரித்த கேள்விகளைப் பெரியவர்களிடம் கேட்கட்டும்.

விசுவாசிகள் சிறு குழுக்களாகப் பிரிந்து தங்கள் நண்பர்களுக்காகவும் உறவினர்களுக்காகவும் ஜெபிக்கவும். உங்கள் நாட்டில் உள்ள புறக்கணிக்கப்பட்ட சமுதாய மக்களைக் கர்த்தர் இரட்சிக்குமாறு ஜெபிக்கவும்.

சேர்ந்து **மனப்பாடம்** செய்ய வேண்டிய வசனம் 1 பேது. 3:21-22.

**கர்த்தரின் பந்தியை** அறிமுகப்படுத்த, யாத். 12:1-14 ல் உள்ள வரலாற்றை, சுருக்கமாகக் கூறவும். எகிப்தில் இஸ்ரவேலர் தங்கள் கதவு நிலையில் இரத்தத்தை பூசி, தலைசாண்களை கொலை செய்த தூதனிடம் இருந்து தங்கள் தலைப்பிள்ளைகளைக் காத்துக் கொண்டனர். கர்த்தரின் பந்தியில் பானம் பண்ணும் நாமும் இயேசுவின் இரத்தத்தால் எவ்வாறு இரட்சிக்கப்படுகிறோம் என்பதை விளக்கவும்.

Copyright 2004 © by Paul-Timothy. May be freely copied.
Download from www.Paul-Timothy.net